INDO TECH

August 24, 2026

Department of Corporate Services
BSE Limited
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street, Fort,
Mumbai – 400 001
Scrip Code: 532717

Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th Floor, Plot No. C/1, G Block,
Bandra Kurla Complex, Bandra (E),
Mumbai – 400 051
Symbol: INDOTECH

Dear Sir / Madam,

Sub: Newspaper advertisement on AGM Intimation, KYC Updation and Communication on Tax Deduction at Source (TDS) on Dividend

Dear Sir/ Madam,

Pursuant to applicable regulations of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we are enclosing herewith the **copies of newspaper clipping** wherein the **Newspaper advertisement on AGM Intimation, KYC Updation and Communication on Tax Deduction at Source (TDS) on Dividend** was published on **Financial Express** dated August 24, 2026 (Page Number 23) and **Makkal Kural** dated August 24, 2026 (Page Number 7) and the same is also available on the website on the company's website www.indo-tech.com.

We request you to take the same on record and confirm.

Thanking you.

For INDO-TECH TRANSFORMERS LIMITED

KARTHICK

Digitally signed by KARTHICK
Date: 2026.08.24 20:17:29 +05'30'

Karthick. D
Compliance Officer

உலகின் கப்பல் கட்டுமான மையமாக இந்தியா மாறும்: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பெருமிதம்

கொல்கத்தா, ஆக.24–

இந்தியா, உலகின் முக்கிய கப்பல் கட்டுமான மையமாக உருவாகும் திறன் கொண்டது என்று மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் கூறினார்.

மேற்கு வங்காளத்தில் சுமார் ரூ.3,500 கோடி மதிப்பிலான 5 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா நேற்று நடந்தது. மத்திய ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.

கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் என்ஜினீயர்ஸ் (ஜி.ஆர்.எஸ்.இ.) கப்பல் கட்டும் தளம், மற்றும் யந்திரா இந்தியா நிறுவனத்தின் 5 விரிவாக்கத் திட்டங்கள் இதில் அடங்கும்.

அடிக்கல் நாட்டிய பின்னர் ராஜ்நாத் சிங் பேசும்போது கூறியதாவது:–

கப்பல் கட்டுமான தொழில் நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதற்கேற்ப புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உள்ளது. பாரம்பரியமாக கப்பல் கட்டுமானத்தில் முன்னணியில் உள்ள நாடுகள் உற்பத்தியைக் குறைத்து வருகின்றன. நாட்டில் அதிகளவிலான தொழிலாளர்கள், உருக்கு நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் திறன் இருப்பதால் இந்தியா இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன்மூலம் இந்தியா உலகின் கப்பல் கட்டுமான மையமாக மாற முடியும். மேற்கு வங்கத்தில் கடந்த காலங்களில் தொழிற்சாலைகள் மூடப்படுவது மற்றும் வேலைநிறுத்தம் பற்றிய செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. ஆனால் இங்கு புதிய அரசு அமைந்த பிறகு புதிய திட் டங்கள் தொடங்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

ஜி.ஆர்.எஸ்.இ. நிறுவனம் ஹூக்ளி ஆற்றின் இருபுறங்களிலும் 2 சிறிய கப்பல் கட்டும் தளங்களையும், ராய்சாக்கில் 32 ஏக்கர் பரப்பிலான இடத்தையும் குத்தகைக்கு எடுத்துள்ளது. இதில் ரூ.2,500 கோடிக்கு மேல் முதலீடு செய்து கப்பல் கட்டு மான மையம் அமைக்கப்பட உள்ளது. இதேபோல யந்திரா இந்தியாவின் இஷாபூரில் ரூ.750 கோடிக்கு மேல் முதலீட்டில் 2 புதிய தொழிற்சாலைகள் அமைக்கப் பட உள்ளன. இந்தத் திட்டங்கள் வேலை வாய்ப்பையும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கும். இவ்விழாவில் மேற்கு வங்க முதல் வர்சுவேந்து அதிகாரியும் உடன் இருந்தார்.

தமிழ்நாட்டில் சர்க்கரை விலை மேலும் உயர்வு: டீ, காபி, இனிப்புகள் விலையும் உயர வாய்ப்பு

சென்னை, ஆக.24–

தமிழ்நாட்டில் பண்டிகை நேரத்தில் சர்க்கரை விலை உயர்ந்து வருவதால், மற்ற உணவு பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சர்க்கரை கிலோ ரூ.72–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மஹாராஷ்டிரா, உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியானா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில், சர்க்கரை உற்பத்திக்கான கரும்பு சாகுபடி, 5 கோடி ஏக்கரில் நடப்பது வழக்கம். ஆனால், பல மாநிலங்களில் தண்ணீர் பற்றாக்குறை, விலை கட்டுப்படியாகாதது, வேலையாள் கூலி அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான கரும்புக்கு, அண்டை மாநிலங்களை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தி குறைவு காரணமாக, பல சர்க்கரை ஆலைகள் உற்பத்தியின்றி மூடி கிடக்கின்றன. சர்க்கரை உற்பத்தி குறைந்ததால், விலை உயரத் தொடங்கி உள்ளது.

தமிழ்நாட்டில் வரலாறு காணாத அளவிற்கு சர்க்கரை விலை உயர்ந்து வருகிறது. அதாவது கடந்த மாதம் கிலோ ரூ.45–க்கு விற்பனை செய்யப்பட்ட சர்க்கரை விலை கிடுகிடுவென உயர்ந்து கடந்த 20–ந்தேதி ஒரு கிலோ சர்க்கரை ரூ.67–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், ஓணம் பண்டிகை, விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை, தீபா வளி உள்ளிட்ட பண்டிகைகள் அடுத்தடுத்து வரவுள்ளதால் சர்க்கரையின் தேவை அதிகரித்துள்ளது.

இது ஒரு புறம் இருக்க, கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக நமது நாட்டில் இ–20 வகை பெட்ரோல் பயன்படுத்தப்படுகிறது. இந்த இ–20 பெட்ரோல் தயாரிப்பதற்கு கரும்பை மூலப்பொருளாகக் கொண்ட எத்தனால் பயன்படுத்தப்படுகிறது.

எனவே அதற்கு கரும்பு தேவை அதிகமாக இருப்பதால் சர்க்கரை விலை கூடுவதாக வியாபாரிகள் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் மத்திய அரசு இ–20 பெட்ரோல் விற்பனைக்கும், சர்க்கரை விலை உயர்வுக்கும் சம்பந்தமில்லை என்று விளக்கம் கொடுத்துள்ளது.

எது எப்படியாக இருந்தாலும் சர்க்கரைத் தேவை அதிகரிப்பு காரணமாக விலை உயர்ந்து வருவதால் மராட்டிய மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் சர்க்கரைப் பதுக்கலில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களுக்காக தமிழ்நாட்டில் சர்க்கரை விலை மேலும் உயர்ந்துள்ளது. அதன்படி நேற்று தமிழ்நாட்டில் சர்க்கரை ஒரு கிலோ 72 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

சர்க்கரை விலை உயர்வால், கடைகளில் டீ, காபி விலையும் உயர்ந்துள்ளன. இனிப்பு வகைகள் உள்ளிட்ட பொருட்களின் விலையும் அடுத்தடுத்து உயரும் வாய்ப்புள்ளது.

சர்க்கரை விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

'பீதியடைய வேண்டாம்'

தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை களின் கூட்டமைப்பின் தலைவர் பிரகாஷ் நாய்க்நவரே அளித்த பேட்டியில் கூறியதாவது:–

தற்போதைய நிலவரப்படி, தென் அமெரிக்க நாடான பிரேசில் மட்டுமே, சர்க்கரை வாங்குவதற்கு உகந்த நாடாக உள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்து, சொந்த பற்றாக்குறையை சமாளித்து வருவதால், அந்நாட்டை நம்ப முடியாது.

பிரேசிலில் இருந்து சரக்கு கப்பல்கள் நம் துறைமுகங்களுக்கு வர, 40–45 நாட்களாகும்.

கப்பலில் சர்க்கரை வந்திறங்கிய பின், துறைமுகத்திலிருந்து ஆலைகளுக்கு செல்ல, கூடுதல் காலம் தேவைப்படும். எனவே, அக்டோபர் 15க்குள் எவ்வளவு சர்க்கரை வந்து சேரும் என துல்லியமாக மதிப்பிடுவது கடினம். ஆனால், அதற்குள் சில சரக்கு கப்பல்கள் வந்து சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பதுக்கல் காரர்கள் மீது மத்திய அரசு எடுத்து வரும் கடும் நடவடிக்கைகளால், சர்க்கரை விலை குறைய துவங்கி உள்ளது. எந்தவொரு அசாதாரண சூழலும் ஏற்படாது. மக்கள் பீதியடைய வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

கர்நாடகம் உள்பட பல மாநிலங்களில் போலி மருந்து தயாரித்து விற்ற 3 பேர் கைது

பெங்களூரு, ஆக. 24–

பெங்களூருவில் போலி மருந்து தயாரித்து பல மாநிலங்களில் விற்ற 3 பேர் வெளிநாட்டில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

பெங்களூரு தெற்கு ராமநகர் மாவட்டம் பிடதி அருகே குருபரகேரனஹள்ளி பகுதியில் அமைந்திருக்கும் ஒரு பண்ணை வீட்டில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு உரிய அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக மருந்து தயாரிப்பு தொழிற்சாலை செயல்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அங்கிருந்த ரூ.5 கோடி மதிப்பிலான போலி மருந்துகள், மாத்திரைகள் உள்ளிட்டவற்றை அதிகாரிகள் கைப்பற்றி பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக மாநில அரசின் உத்தரவின்பேரில் சிறப்பு புலனாய்வு குழு (எஸ்.ஐ.டி.) போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகிறார்கள். மேலும் அந்த கும்பல் கர்நாடகம் மட்டுமல்லாது, ஆந்திரா, தெலுங்கானா உள்பட பல்வேறு மாநிலங்களுக்கு போலி மருந்துகளை வினியோகம் செய்திருந்ததும் தெரியவந்தது.

இந்த நிலையில் சிறப்பு புலனாய்வு குழு போலீசார் நடத்திய விசாரணையில் போலி மருந்து தயாரித்து விற்ற வழக்கில் சர்வதேச கும்பலுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு மூளையாக பிரசாந்த் என்பவரும், அவருடைய 2 தம்பிகளும் செயல்பட்டு வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அவர்களை பிடிக்க கர்நாடக போலீசார் தீவிரம் காட்டினர்.

அதன்பேரில் நேற்று அவர்கள் 3 பேரையும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு நாட்டின் விமான நிலையத்தில் வைத்து போலீசாரும், சுங்க வரித்துறை அதிகாரிகளும் சேர்ந்து கைது செய்து இருக்கிறார்கள்.

இவர்கள் இந்தியா மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பல நாடுகளுக்கு குறைந்த விலையில் புற்றுநோய் மருந்தை வழங்குவதாக கூறி போலி மருந்துகளை வினியோகித்ததும் விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

அதுமட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து பல கோடி ரூபாய் மதிப்பிலான காலாவதியான மருந்துகளை பிரசாந்த், இந்தியாவுக்கு அனுப்பி அவற்றை தனது 2 தம்பிகள் மூலம் பல்வேறு நாடுகளுக்கு விற்றதும் தெரியவந்துள்ளது.

அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தவும் எஸ்.ஐ.டி. போலீசார் முடிவு செய்துள்ளனர்.

இதுமட்டுமின்றி கர்நாடகத்தில் பிரசாந்த் உள்ளிட்டோருக்கு உடந்தையாக செயல்பட்டு வந்த வெங்கடேஷ் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

தம்ம சக்ர பரிவர்த்தன திருவிழா பயணம் மேற்கொண்டவர்களுக்கு நிதி: நவம்பர் 15–க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஆக.24–

பௌத்த சிறுபான்மையினர் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்ர பரிவர்த்தன திருவிழாவிற்கு பயணம் மேற்கொண்டவர்கள் நிதி உதவி கோரும் விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 150 பௌத்த நபர்களுக்கு தமிழ்நாடு அரசால் 2025–26–ம் ஆண்டில் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்த்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ. 5,000 வரை மானியம் வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2026–ம் ஆண்டு பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 15.11.2026க்குள் சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம் சேப்பாக்கம், சென்னை என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு சென்னை கலெக்டர் தெரிவித்துள்ளார்.

"குப்பையைப் பிரிப்போம்; நாளையை காப்போம்": வளசரவாக்கம், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் வீடுகளுக்கான 40 நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை, ஆக.24–

சென்னை மாநகராட்சி, பொதுமக்களிடையே கழிவுகளை தரம் பிரித்து வழங்கும் பழக்கத்தை உருவாக்கும் நோக்கில் "குப்பையைப் பிரிப்போம் – நாளையை காப்போம்" என்ற 40 நாள் வீடுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி தெற்கு வட்டாரத்தில் தொடங்கப்பட்டது.

வளசரவாக்கம் மண்டலத்தில் கிருஷ்ணமாச்சாரி நகர், 4வது தெரு மற்றும் அஷ்டலட்சுமி நகர் 5வது தெரு, ஆலந்தூர் மண்டலத்தில் இமாச்சல் நகர் இணைப்புப் பகுதி, அடையாறு மண்டலத்தில், திருவான்மியூர், முத்துலட்சுமி சாலை, பெருங்குடி மண்டல அலுவலகப் பகுதி,

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் தொழிலாளர் குடியிருப்புப் பூங்காப் பகுதி ஆகிய இடங்களில் உள்ள பொதுமக்களுக்கு வீடுவீடாகச் சென்று மக்காத குப்பைகளை தனியாக சேகரித்து வழங்குவதற்கான பிரத்யேகப் பை மற்றும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் வீடுகளின் சுவற்றில் ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு மண்டலத்திலும் 10,000 வீடுகள்

இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக தென் சென்னை

மண்டலங்களான வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் மொத்தம் 50,000 வீடுகளைச் சென்றடையும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் 10,000 வீடுகள் தேர்வு செய்யப்பட்டு, கட்டம் கட்டமாக திட்டம் செயல்படுத்தப்படும்.

திட்டத்தின் தொடக்க நாளான தெற்கு வட்டாரத்தில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. தொடக்க கட்டமாக ஒவ்வொரு மண்டலத்திலும் 1,000 வீடுகள் வீதம் மொத்தம் 5,000 வீடுகளுக்கு கழிவு தரம் பிரித்தலுக்கான சிறப்பு பைகள் மற்றும் விழிப்புணர்வு தகவல் தொகுப்புகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டன.

முதற்கட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து, மீதமுள்ள 45,000 வீடுகளுக்கும் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் மக்காத குப்பைகளை தனியாக சேகரித்து வழங்குவதற்கான பிரத்யேக பை வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், வீடு வீடாக நடைபெறும் நேரடி விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் மக்காத குப்பைகளை தனியாக பிரித்து, நிர்ணயிக்கப்பட்ட சேகரிப்பு முறையில் வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் ரேவந்த் சரண், எம். ஹரிஷ், ஈ.சி.ஆர். பி.சரவணன், மண்டலக்குழுத் தலைவர்கள் நொளம்பூர் வே.ராஜன், என். சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மா.ரமணி மாதவன், ஜெ.எஸ். செல்வேந்திரன், ஜெ.மணிகண்டன், மண்டல அலுவலர்கள், மாநகராட்சி மற்றும் உர்பேசர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

PUBLIC NOTICE

NOTICE is hereby given that the below mentioned Authorised Person is no longer affiliated as Authorised Person of Kotak Securities Limited.

Authorised Person Name	Trade Name	Exchange Registration Numbers of Authorised Person	Address of Authorised Person
SASIKALA	SASIKALA	NSE - AP0291572671	G1 Ground Floor Vaishnavi Residency Plot No 231 Gandhi Road Manikandan Nagar Kundrathur Chennai 600069

Please note that above mention Authorised Person (AP) is no longer associated with us. Any person henceforth dealing with above mention AP should do so, at their own risk. Kotak Securities Ltd. shall not be liable for any such dealing. In case of any queries for the transactions till date, Investors are requested to inform Kotak Securities Ltd. within 15 days from the date of this notification, failing which it shall be deemed that there exists no queries against the above mentioned AP.

kotak Kotak Securities Kotak Securities Limited. Registered Office: 27 BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra (E), Mumbai 400051. CIN: U99999MH1994PLC134051, Telephone No.: +22 43360000, Fax No.: +22 67132430. Website: www.kotak.com / www.kotaksecurities.com. Correspondence Address: Infinity IT Park, Bldg. No 21, Opp. Film City Road, A K Vaidya Marg, Malad (East), Mumbai 400097. Telephone No: 42856825. SEBI Registration No: INZ000200137 (Member of NSE, BSE, MSE, MCX & NCDEX), AMFI ARN 0164, PMS INP000000258, and Research Analyst INH000000586. NSDL/CDSL: IN-IN-DP-629-2021. Compliance Officer Details: Mr. Hiren Thakkar Call: 022 - 4285 8484, or Email: ks.compliance@kotak.com.

INDO TECH

இன்டோ-டெக் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட்

CIN: L29113TN1992PLC022011

பதிவு அலுவலகம்: சர்வே எண். 153-210, இலுப்பப்பட்டு கிராமம், ராஜகுளம் அருகில், காஞ்சிபுரம் (மாவட்டம்), தமிழ்நாடு - 631 561 தொலைபேசி: +91 44 27281854, வலைதளம்: www.indo-tech.com; மின்னஞ்சல்: investor@indo-tech.com

நிறுவனத்தின் 34வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட, பங்குதாரர்களால் கேஒய்சி புதுப்பித்தல் மற்றும் டிவிடென்ட் வழங்கல் தொகை மீது மூலத்தில் வரிப்பிடித்தம் (TDS) மீதான தகவல் அறிவிப்பு

வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தை கூட்டுவதற்காக அனுப்பப்படும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக 2026 செப்டம்பர் 23-ம் தேதி புதன் கிழமையன்று காலை 10:30 மணிக்கு (இந்திய ஸ்டாண்டர்ட் நேரம்) நிறுவனத்தின் 34வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM), வீடியோ கான்ஃபரன்சிங் ("VC") / பிற ஒலி ஒளி வழிமுறைகள ("OAVM") மூலம் நடத்தப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் ("MCA") வெளியிடப்பட்ட 2025 செப்டம்பர் 22 தேதியிட்ட MCA பொது சுற்றுமடல் எண். 03/2025 உடன் 2024 செப்டம்பர் 19 தேதியிட்ட பொது சுற்றுமடல் எண். 09/2024, 2023 செப்டம்பர் 25 தேதியிட்ட சுற்றுமடல் 09/2023 மற்றும் 2020 மே 05 தேதியிட்ட பொது சுற்றுமடல் எண்.20/2020, 2020 ஏப்ரல் 13 தேதியிட்ட பொது சுற்றுமடல் எண்.17/2020, 2020 ஏப்ரல் 08 தேதியிட்ட பொது சுற்றுமடல் எண்.14/2020 மற்றும் செபி (SEBI) அமைப்பால் 2023 அக்டோபர் 07 தேதியிட்டு வெளியிடப்பட்ட சுற்றுமடல் எண். SEBI/HO/CFD/CFD-PoD/2/P/CIR/P/2023/167 மற்றும் 2020 மே 12 தேதியிட்ட சுற்றுமடல் எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 மற்றும் 2013 நிறுவனங்கள் சட்டத்தின் பொருந்துகின்ற விதிகள் மற்றும் செபி ("SEBI") (பட்டியலிடல் கடப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்) ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமானதாக நிறுவனத்தின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM). VC அல்லது OAVM வழிமுறையில் ஒரு பொது அமைவிடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பின்றி நடத்தப்படும். இந்த வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM) நடைபெறும் அமைவிடம் நிறுவனத்தின் பதிவு அலுவலகமாக இருக்கும்.

நிறுவனத்தில் / சேமிப்பகங்களில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திருக்கிற உறுப்பினர்களுக்கு மட்டும் மின்னணுவியல் வழிமுறையில் மட்டுமே 2025-26 வருடாந்திர அறிக்கையோடு சேர்த்து AGM-க்கான அறிவிப்பும் சேர்த்து அனுப்பப்படும். எனினும், இதற்கு கோரிக்கை வைக்கின்ற பங்குதாரர்களுக்கு மட்டுமே வருடாந்திர அறிக்கையின் தாள் வடிவிலான நகலை நிறுவனம் அனுப்பி வைக்கும். இந்த அறிவிப்பு மற்றும் 2025-26 வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் வலைதளம்: www.indo-tech.com, பிஎஸ்ஈ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இந்தியா லிமிடெட் ஆகிய பங்கு சந்தைகளின் வலைதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றிலும் மற்றும் MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்-ன் (முன்னதாக லிங்க் இன்டைம் இந்தியா பி. லிமிடெட்) வலைதளமான instavote.linkintime.co.in-லும் கிடைக்குமாறு செய்யப்படும். வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் VC/OAVM வசதி வழியாக மட்டுமே உறுப்பினர்கள் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம்.

இதுவரை தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திராத உறுப்பினர்கள், தங்களது சேமிப்பக பங்கேற்பாளர்கள் ("DP") வழியாக பருப்பொருள் தன்மை நீக்கப்பட்ட வடிவில் வைக்கப்பட்டிருக்கும் பங்குகள் குறித்து, அவற்றை பதிவுசெய்யுமாறும் மற்றும் பருப்பொருள் வடிவில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை பதிவாளர் மற்றும் பங்கு மாற்றுகை முகவரான ("RTA") MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்-ன் (முன்னதாக லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்) மின்னஞ்சல் முகவரியான enotices@in.mpms.mufg.com. என்பதற்கு மின்னஞ்சலை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தின்போது தொலைதூர மின்–வாக்களிப்பு மற்றும் மின்-வாக்களிப்பு ஆகிய இரு மின்னணுவியல் வழிமுறைகள் மூலம் உறுப்பினர்கள் தங்களது வாக்களிப்பதற்கான உரிமையை செயல்படுத்துவதற்கு நிறுவனம் வசதியினை தனது உறுப்பினர்களுக்கு வழங்கும். உறுப்பினர்கள் பருப்பொருள் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் வழிமுறை உட்பட அல்லது தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவுசெய்திராத உறுப்பினர்கள் அவர்களது வாக்குகளை மின்-வாக்களிப்பு முறை வழியாக செய்வது உட்பட மின்-வாக்களிப்பு செயல்முறை மீதான விரிவான அறிவுறுத்தல்கள், 34-வது வருடாந்திர பொதுக்குழு கூட்ட அறிவிப்பின் ஒரு பகுதியாக வழங்கப்படும்.

இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு, 2026 ஆகஸ்ட் 11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2025-26 ஆம் நிதியாண்டிற்கு ஒரு பங்குக்கு ₹10/- வீதம் பங்குலாபம் (டிவிடென்ட்) வழங்க பரிந்துரைத்துள்ளது. இது, 2026 செப்டம்பர் 23, புதன்கிழமை அன்று நடைபெறவுள்ள வரவிருக்கும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் (AGM) பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது. குறிப்பிடப்பட்ட இந்தப் பங்குலாபமானது, 2026 செப்டம்பர் 16, புதன்கிழமை அன்று வணிக நேர முடிவின்படி நிறுவனத்தின் பங்குதாரர்கள் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள மற்றும் டெபாசிட்டர்களில் பயனடையும் உரியாஉஉஉளாக உள்ள பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் ("பதிவு நாள்"). மேலும், பங்குலாப விநியோகத்தின் மீதான மூலத்தில் வரி பிடித்தம் (TDS) குறித்த விவரங்கள் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் மற்றும் நிறுவனத்தின் வலைத்தளத்திலும் வெளியிடப்படும் என்பதை பங்குதாரர்களுக்கு நிறுவனம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

இடம்: காஞ்சிபுரம்
தேதி: ஆகஸ்ட் 24, 2026

இயக்குநர்கள் குழுவின் ஆணையின்படி
இன்டோ-டெக் டிரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட்-க்காக
ஒப்பம்/-
ஷிவ பிரசாத் பதி
நிறுவன செயலாளர்

படிவம் G

விருப்பம் தெரிவிக்கக் கோரும் (EOI) அழைப்பு

M/s. Candid Industries Limited நிறுவனம் ஹைதராபாத்தில் மின்விசிறிகள் மற்றும் வீட்டு உபயோக மின் சாதனங்கள் தயாரிப்புத் தொழிலை மேற்கொண்டு வருகிறது.

இந்திய நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை வாரியம் (கார்ப்போரேட் நபர்களுக்குரிய இன்சால்வன்சி தீர்வு நடைமுறைகள்) ஒழுங்கு விதிகள் 2016, ஒழுங்கு விதி 36A (1)-ன் கீழ்

முக்கிய விவரங்கள்

1.	பெரு நிறுவன கடனாளியர் பெயர் உடன் PAN & CIN/ LLP எண்.	M/s. Candid Industries Limited CIN: U18100TG1991PLC013088 PAN: AAACE4493Q
2.	பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி	மனை எண்.1, சர்வே எண்.308, வெங்கடேஷ்வரா கோஆப்ரேட்டிவ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஜீடிமெட்லா, ஹைதராபாத், தெலுங்கானா-500 855.
3.	URL இணையத்தளம்	இல்லை
4.	பெரும்பாலான நிலை சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	சிப்காட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கும்மிடிப்பூண்டி
5.	முக்கிய தயாரிப்புகள்/ சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	நிறுவனம் தற்போது செயலிழந்துவிட்டது
6.	முக்கிய தயாரிப்புகளின் அளவு மற்றும் மதிப்பு/ கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட சேவைகள்	7 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த நடவடிக்கையும் இல்லை
7.	பணியாளர்கள் / வேலையாட்களின் எண்ணிக்கை	இல்லை
8.	இரண்டு ஆண்டுகளுக்கான கடைசியாக கிடைக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்) உள்ளிட்ட கூடுதல் விவரங்கள்.	SBOD-ல் சமர்ப்பிக்கப்பட்ட தற்காலிக இருப்பு நிலை கிடைக்கும்
9.	சட்டம் பிரிவு 25(2)(h)-ன் கீழ் தீர்மான விண்ணப்பதாரரின் தகுதிகள்	தீர்மான தொழில்முறையாளர் வேண்டுகோளின் பெயரில் அஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். candidcirp@gmail.com
10.	விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பங்கள் வந்து சேர இறுதி தேதி	08.09.2026
11.	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வழங்கும் தேதி	10.09.2026
12.	தற்காலிக பட்டியலுக்கு ஆட்சேபனை சமர்ப்பிக்க இறுதி தேதி	15.09.2026
13.	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப்பட்டியல்	20.09.2026
14.	அறிக்கைத்தகவல் மதிப்பீடு குறித்த கணக்கீடு வழங்கும் தேதி மற்றும் உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களிடம் தீர்மான திட்டங்களை கோரும் தேதி	25.09.2026
15.	தீர்மான திட்டத்தினை சமர்ப்பிக்க இறுதி தேதி	25.10.2026
16.	EOI சமர்ப்பிக்கவேண்டிய மின்னஞ்சல்	candidcirp@gmail.com
17.	பெருநிறுவன கடனாளியின் MSME ஆக பதிவு நிலையின் விவரங்கள்	இல்லை

V.துரைசாமி
தீர்மான தொழில்முறையாளர்
Regn:IBBI/PA-002/IP-N00609/2018-2019/11862)
எண்.397, பிரிசிசன் பிளாசா, எண்.23, மூன்றாவது தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018
M/s. Candid Industries Limited-க்காக (CIRP-ன் கீழ்)

தேதி: 24.08.2026
இடம்: சென்னை

படிவம் எண். INC – 26

[கம்பெனிகள் (துவக்கம்) விதிகள், 2014–ன் விதி 30–ன் படி]

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்காக பத்திரிக்கையில் வெளியிடப்பட வேண்டிய விளம்பரம்

மத்திய அரசு முன்னிலையில்

மண்டல இயக்குனர், தென் மண்டலம், சென்னை

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 13–ன் துணைப் பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (துவக்கம்) விதிகள், 2014–ன் விதி 30–ன் துணை விதி (5)–ன் உட்பிரிவு (a)–ன் விஷயத்தில்

மற்றும்

LSML பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்

பதிவு அலுவலகம் : கட்டிடம் எண். 11, பொம்முலியர் தெரு, தரைத்தளம், சௌகார்பேட்டை, சென்னை, தண்டையார்பேட்டை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, தமிழ்நாடு – 600001

.....மனுதாரர்

ஆகஸ்ட் 22, 2026 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை **"தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "தெலுங்கானா மாநிலத்திற்கு"** மாற்றுவதற்கு ஏதுவாக கம்பெனியின் அமைப்பு ஆவணத்தில் மாற்றம் செய்வதை உறுதி செய்யக்கோரி, கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 13–ன் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்க கம்பெனி உத்தேசித்துள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கம்பெனியின் உத்தேசிக்கப்பட்ட பதிவு அலுவலக மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய எந்தவொரு நபரும், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள், MCA–21 **இணையதளம்** (www.mca.gov.in) **மூலமாக முதலீட்டாளர் புகார் படிவத்தை** தாக்கல் செய்தோ அல்லது தங்களது நலனின் தன்மை மற்றும் ஆட்சேபனைக்கான காரணங்களைக் கூறும் பிரமாணப் பத்திரத்துடன் கூடிய தங்களது ஆட்சேபனைகளை, மண்டல இயக்குனர், தென் மண்டலம், 5–வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை – 600006, தமிழ்நாடு என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். மேலும் அதன் ஒரு நகலை விண்ணப்பதாரர் கம்பெனியின் கீழ்க்கண்ட பதிவு அலுவலக முகவரிக்கும் அனுப்ப வேண்டும்:

கட்டிடம் எண். 11, பொம்முலியர் தெரு, தரைத்தளம், சௌகார்பேட்டை, சென்னை, தண்டையார்பேட்டை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, தமிழ்நாடு – 600001

LSML பிரைவேட் லிமிடெட் சார்பாக
ஒப்பம்/–
கிரிஷ் ஜெயின்
இயக்குனர்
DIN: 06789423

ஆகஸ்ட் 22, 2026
ஹைதராபாத்

RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED

(Formerly Radiant Cash Management Services Private Limited)

CIN: L74999TN2005PLC055748

பதிவு அலுவலகம் : 28, விஜயராகவா ரோடு, தி.நகர், சென்னை- 600 017, தமிழ்நாடு.
தொலைபேசி : 91- 44 – 4904 4904. **மின்னஞ்சல்:** investorrelations@radiantcashlogistics.com
இணையதளம் : https://radiantcashservices.com

21வது ஆண்டு பொதுக்கூட்டம், ஈவுத்தொகை மற்றும் பதிவுத்தேதி பற்றிய தகவல்

1. கம்பெனியின் **21வது ஆண்டு பொதுக்கூட்டம் ("AGM")**, காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலம் **புதன்கிழமை, செப்டம்பர் 16, 2026 பிற்பகல் 3.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** கம்பெனிகள் சட்டம், 2013-ன் பொருந்தக்கூடிய எல்லா விதிகளுக்கு இணங்க மற்றும் அதன்கீழ் உள்ள விதிகள் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியாவால் (SEBI) (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் தேவைகள்) விதிகள் 2015, அத்துடன் வாசிக்க வேண்டிய கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் ("MCA") மற்றும் செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா ("SEBI") வழங்கிய எல்லா பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின்படி ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அலுவல்கள் பரிவர்த்தனை செய்ய நடைபெறும்.
2. கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் ஆகியோரிடம் தங்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னணு மூலம் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு அத்துடன் 2025-26 வருடாந்திர அறிக்கை ஆகியவை அனுப்பி வைக்கப்படும். ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு அத்துடன் அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான **www.radiantcashservices.com**-ல் மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்ஸ்சேஞ்களின் இணையதளங்களான அதாவது மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ("BSE") **www.bseindia.com** மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ("NSE") **www.nseindia.com**-லும் மேலும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) இணையதளமான **www.evoting.nsdl.com**-லும் கிடைக்கப்பெறும்.
3. **மின்னணு-வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் முறை :**
ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அலுவல்களை மேற்கொள்வதற்காக ஆண்டு பொது கூட்டத்தில் தொலைத்தூர மின்னணு வாக்களிக்கும் வசதி கம்பெனியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வாக்களிக்கும் முறை, தொலைத்தூர வாக்களிப்பு (தொலைத்தூர மின்னணு-வாக்கு) வழிமுறைகள் உள்ளிட்டவை ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன. தொலைத்தூர மின்னணு-வாக்கு மூலம் வாக்களிக்காமல் ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்கூட்டத்தில் மின்னணு-வாக்கு மூலம் வாக்களிக்க முடியும்.
4. **VC/OAVM மூலம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் சேருதல் :**
ஆண்டு பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் VC/OAVM-ல் NSDL மின்னணு-வாக்கு முறை மூலம் கலந்து கொள்ள முடியும். ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான உள்நுழைவுச் சான்றுகள் மற்றும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றிய தகவல்கள் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் விளக்கப்பட்டுள்ளன.
5. **ஈவுத்தொகைக்கான பதிவுத்தேதி மற்றும் ஈவுத்தொகை செலுத்தப்படும் தேதி :**
அ. மார்ச் 31, 2026-ல் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இறுதி ஈவுத்தொகையை பெறுவதற்கான உரிமை உள்ள உறுப்பினர்களை நிர்ணயிப்பதற்கான "**பதிவுத்தேதி**"யாக **வியாழக்கிழமை, செப்டம்பர் 10, 2026** என நிறுவனம் நிர்ணயித்துள்ளது.
ஆ. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு பதிவு தேதியன்று நிறுவன உறுப்பினர் பதிவேட்டில் உள்ள பெயர்களுக்கு மற்றும் மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு பதிவு தேதியன்று டெபாசிட்டரியால் கொடுக்கப்பட்ட பயன்பெறும் உரிமையாளர்கள் பட்டியலின்படி ஈவுத்தொகையானது, ஆண்டு பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டால், செப்டம்பர் 25, 2026 அன்று அல்லது அதற்குப் பிறகு சட்டப்பூர்வ காலகெடுவுக்குள் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும்.
இ. டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களைப் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு ஈவுத்தொகை மின்னணு முறையில் செலுத்தப்படும்.
6. **மின்னஞ்சல் முகவரி அல்லது வங்கி கணக்கு ஆணைப் பதிவு செய்யும்/ புதுப்பிக்கும் முறை :**
நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யவில்லை அல்லது உங்கள் வங்கிக் கணக்கு ஆணையைப் புதுப்பிக்கவில்லை என்றால், கீழே உள்ள விதிமுறைகளைப் பின்பற்றவும் :

பங்கு வைத்திருக்கும் வகை	பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்
மின்னணு முறையில் வைத்திருப்பவர்கள்	உங்கள் டீமேட் கணக்குகளை பராமரிக்கும் உங்கள் டெபாசிட்டரி பங்கேற்பார்களிடம் உங்கள் விவரங்களைப் பதிவு செய்யவும் / புதுப்பிக்கவும்.
காகித முறையில் வைத்திருப்பவர்கள்	நிறுவனத்தின் ரெஜிஸ்டரார் மற்றும் பங்கு பரிமாற்ற ஏஜென்ட்களான MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிடம் ("MUFG இன்டைம்") உங்கள் விவரங்களைப் பதிவு செய்யவும்/புதுப்பிக்கவும்.

ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் குறிப்பாக ஆண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான விவரங்கள் மற்றும் ஆண்டு பொதுக்கூட்டத்தில் தொலைத்தூர மின்னணு-வாக்கு மூலம் வாக்களிக்கும் முறை ஆகியவற்றை பங்குதாரர்கள் கவனமாக படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED-க்காக
இயக்குனர் குழுவின் ஆணைப்படி
ஒப்பம்
Col. டேவிட் தேவசகாயம் (ஓய்வு)
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி : 24.08.2026

...continued from previous page.

AN INDICATIVE TIMETABLE IN RESPECT OF THE ISSUE IS SET OUT BELOW:

Submission of Bids (other than Bids from Anchor Investors)

Bid/Issue Period (except the Bid/Issue Closing Date)	
Submission and revision of Bids	Only between 10.00 a.m. and 5.00 p.m. (Indian Standard Time ("IST")
Bid/Issue Closing Date*	
Submission of Electronic Applications (Online ASBA through 3-in-1 accounts) – For Individual Investors, other than QIBs and Non-Institutional Investors	Only between 10.00 a.m. and up to 5.00 p.m. IST
Submission of Electronic Applications (Bank ASBA through Online channels like Internet Banking, Mobile Banking and Syndicate UPI ASBA applications)	Only between 10.00 a.m. and up to 4.00 p.m. IST
Submission of Electronic Applications (Syndicate Non-Retail, Non-Individual Applications)	Only between 10.00 a.m. and up to 3.00 p.m. IST
Submission of Physical Applications (Bank ASBA)	Only between 10.00 a.m. and up to 1.00 p.m. IST
Submission of Physical Applications (Syndicate Non-Retail, Non-Individual Applications of QIBs and Non-Institutional Investors	Only between 10.00 a.m. and up to 12.00 p.m. IST
Modification/ Revision/ Cancellation of Bids	
Upward Revision of Bids by QIBs and Non-Institutional Investors categories#	Only between 10.00 a.m. on the Bid/Issue Opening Date and up to 4.00 p.m. IST on Bid/Issue Closing Date
Upward revision of Bids by Individual Investors who apply for Minimum Application Size	Only between 10.00 a.m. and up to 5.00 p.m. IST on Bid/ Issue Closing Date

Bid/Issue Program

Event	Indicative Dates
Bid/ Issue Opening Date	MONDAY, AUGUST 31, 2026*
Bid/ Issue Closing Date	WEDNESDAY, SEPTEMBER 2, 2026**
Finalization of Basis of Allotment with the Designated Stock Exchange	On or about THURSDAY, SEPTEMBER 3, 2026
Initiation of Allotment / Refunds / Unblocking of Funds from ASBA Account or UPI ID linked bank account	On or about FRIDAY, SEPTEMBER 4, 2026
Credit of Equity Shares to Demat accounts of Allottees	On or about FRIDAY, SEPTEMBER 4, 2026
Commencement of trading of the Equity Shares on the Stock Exchange	On or about MONDAY, SEPTEMBER 7, 2026

* *UPI mandate end time was at 5:00 p.m. on the Bid/ Issue Closing Date.*

Individual Investors, QIBs and Non-Institutional Bidders could neither revise their bids downwards nor cancel/withdraw their Bids.

ASBA* **Simple, Safe, Smart way of Application- Make use of it!!!**
***Applications Supported by Blocked Amount (ASBA) is a better way of applying to issues by simply blocking the fund in the bank account, investors can avail the same. For details, check section on ASBA below.**
Mandatory in Public Issues from January 01, 2016. No cheque will be accepted.

UPI UNIFIED PAYMENTS INTERFACE

UPI-Now available in ASBA for Individual Investors and Non - Institutional Investor applying for amount upto ₹5,00,000/-, applying through Registered Brokers, DPs and RTAs. UPI Bidders also have the option to submit the application directly to the ASBA Bank (SCSBs) or to use the facility of linked online trading, demat and bank account. Investors are required to ensure that the bank account used for bidding is linked to their PAN. Bidders must ensure that their PAN is linked with Aadhaar and are in compliance with CBDT notification dated February 13, 2020, issued by the Central Board of Direct Taxes and the subsequent press releases, including press releases dated June 25, 2021 and September 17, 2021 and CBDT circular no.7 of 2022, dated March 30, 2022 read with press release dated March 28, 2023 and any subsequent press releases in this regard.

